# புல்லாங்குழல்



திக்குவல்லை கமால்

# புல்லாங்குழல்

# புல்லாங்குழல்

திக்குவல்லை கமால்

வெளியீடு

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி,
செத்திரிபாய,
பத்தரமுல்ல

2013- திறந்த கையெழுத்துப் பிரதியாக்கப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பு இது. இதன் உள்ளடக்கம் ஆசிரியரின் கருத்தேயன்றி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கருத்துக்கள் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.


புல்லாங்குழல்
(கவிதை)

திக்குவல்லை கமால்

முதற் பதிப்பு: டிசம்பர் 2013

ISBN: 978-955-0353-32-3

வெளியீடு:
கலாசார அலுவல்கள் திணைக்களம்

அச்சகம்:

விஷ்வ பிரின்டர்ஸ்
இல. 534, மருதானை வீதி,
கொழும்பு-10.

## சமர்ப்பணம்

பத்திரிகையாளர்
**பி.ராமநாதன்**
அவர்களுக்கு.....

பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

# படைப்பிலக்கியத்தில் ஈடுபடுவது வாழ்வின் பேரின்பம்.

நாவல், சிறுகதை, கவிதை என்பன இலக்கியப் பெருமானத்தை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்ற மூன்று விடயங்களாகும். இலக்கியப் படைப்பென்ற வகையில் இம்மூன்றும் இலக்கியத்தை ஒரு பாடமாகப் பயில்கின்ற மாணவர் மத்தியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சமூக மயமாக்கப்பட்டுள்ள மக்கள் இலக்கியமான இம்மூன்று வகைகளும் தனிப்பட்ட அபிமானத்திற்கும், இரசிகத் தன்மைக்கும் ஏற்ப உபயோகத்துக்குள்ளா கின்றன. சமூக அனுபவங்கள் ஒன்றையோ பலவற்றையோ நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் என்போர் வாசகர் முன் வைக்கின்றவர்களாவர்.

சில சந்தர்ப்பங்களில் ஓர் இலக்கியவாதி இம்மூன்று துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பர். இத்தகைய இலக்கியச் சூழலில் நாவல், சிறுகதை, கவிதை படைப்பாக்கத்தில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பதோடு, அவற்றை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி நடாத்தி, வெற்றிப் படைப்புக்களை அச்சிட்டு வெளியிடும் செயற்திட்டத்தின் ஓர் அறுவடையே **புல்லாங்குழல** என்ற இந்த கவிதை நூல்.

அகில இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற பிரதிகள், பிரபல இலக்கியவாதிகளைக் கொண்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வெற்றிப் படைப்பான இந்த கவிதை நூல் **திக்குவல்லை கமால** அவர்களின் படைப்பாற்றலை பிரபல்யப்படுத்துகிறது. நூலாசிரியரின் உயர்ந்த வெற்றிப் படைப்பாற்றலை நான் இதயபூர்வமாக வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மேலும் இந்த இலக்கியவாதிகளை ஊக்கமூட்டி, ஆற்றலை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்குவதற்கு வழிகாட்டிய கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு ரீ.பீ. ஏகநாயக அவர்களையும், கலாசார கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. வஸந்த ஏகநாயக அவர்களையும், செயற்குழுவினரையும் நன்றியுடன் ஞாபகமூட்டுகிறேன்.

இலக்கியத்துறையை வளப்படுத்தும் நோக்கில் ஆக்கத்துறையில் ஈடுபடும் இந்த இலக்கியவாதிகள் மென்மேலும் தைரியமும் வெற்றியும் பெறப் பிரார்த்திக்கிறேன்.

விஜித் கனுகல
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல.
2013.12.20

# திறவுகோல்

கவிதை என் திறவுகோல்.

கவிதைத் திறவுகோலுடனேயே இலக்கிய உலகில் தடம் பதித்தேன்.

எளிமை.... வாசகனைச் சிரமப்படுத்தாத புரிதல்... மானிட நேயத்தைப் பரிவர்த்தனை செய்யும் பக்குவம்... இந்த அலங்காரங்கள் பொருந்தி வரும்போதே அதை நல்ல கவிதையென்று நான் கருதுகிறேன்.

அத்தகைய சில பதிவுகளைத் தேடித் தொகுத்தபோது, அது 'புல்லாங்குழல்' ஆகியது.

ஏற்கனவே எலிக்கூடு (1973), பூக்களின் சோகம் (2009) என்பன கவிதை முகம் காட்டிய எனது தொகுப்புக்களாகும்.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம், திறந்த கவிதைப் பிரதியாக்கப் போட்டி மூலமாக இதனைத் தெரிவு செய்து வெளியிடுகிறது.

கைகொடுத்தோர்க்கெல்லாம் இதய பீடத்தில் இருப்பிடமுண்டு.

இலக்கிய தாகமே இமயதாகம்.

திக்குவல்லை கமால்
2013.12.10

**dickwellekamal @ gmail.com**
**0716386955, 0382292118**

உள்ளே...

●சுந்தரபூமி-1, ●மண்-2, ●மௌனாஞ்சலி-4, ●பார்வை-5, ●மேடை- 6, ●கர்வம்-7, ●சந்திப்பு-8, ●அலுவலர்கள்-9, ●உலகசாதனை-10, ●கோடை-12, ●அடிமைச் சாசனம்-13, ●தபால்-15, ●மந்திரவாதி-17, ●அழகிய கவிதை-18, ●விரல்கள்-20, ●வாக்குறுதி-22, ●பக்கபலம்-23, ●உயிர்ப்பு-24, ●சேவைச் செம்மல்-26, ●வரம்-27, ●பனிப்பூ-28, ●கலை-30, ●புல்லாங்குழல்-31, ●விதி....?- 32, ●பூகம்பம்-33, ●ரயில் சிநேகிதம்-34, ●இதயநேய்-36, ●தவிப்பு-38, ●முழங்கு-39, ●கோடுகள்-40, ●உனதுபாதை-41, ●பூஜ்யம்-43, ●குழுமம்-45, ●புதுமை-46, ●பிரார்த்தனை-47, ●தனிமை-48, ●சுயம்-49, ●அன்பு-50, ●இழப்புகள்-51, ●வெளிப்பாடு-52, ●இடைவெளி-53, ●மாற்றம்- 54, ●வேலை-55, ●சந்திப்பு...?-56, ●ஆயுதம்-58, ●வரவேற்பு-59, ●வெளிச்சம்-60, ●துர்ப்பாக்கியம்-62, ●இல்லை-63, ●சாதனை-64,

# சுந்தரபூமி

மரந்தளிர்களின் மௌனத்தவம்
இதற்காகத்தான்.
சாலையோர
சாமான்ய மனிதனின்
பிரார்த்தனையும் இதுதான்.

ஒவ்வொரு கைகளும்
இதனை
எட்டிப்பிடிக்கவே
எழுகின்றன.

சாகித்திய சங்கநாதம்
ஊதப்படுவதும்
ஓதப்படுவதும்
இதற்காகத்தான்.

பாலைகளெல்லாம் சோலைகளாகி
சோலைகளெல்லாம் சங்கீதம் பரவி
மயிலும் குயிலும் ஆடிப் பாடும்
சுந்தரக் கனவுகளுடனேயே
ஒவ்வொருநாளும்
நாம் கண்விழிக்கிறோம்.

# மண்

எங்கள் வியர்வையும்
எங்கள் கண்ணீரும்
மணக்கின்ற மண்.

எங்கள் தாத்தாவும்
தாத்தாவின் தாத்தாவும்
ஆண்டு அனுபவித்து
ஆழ்துயில் கொள்ளும் மண்.

பரம்பரை பரம்பரையாய்
கைமாறிக் கைமாறி
உழுதுண்டு புசித்த மண்.

முதல் தடம் பதித்தமண்
மூச்சுக் காற்றுத் தொட்டமண்
அழுத மண்- தொழுத மண்.

அகதியாய்
இன்றெமக்கு
அந்நியமாய்ப் போனாலும்....

நாளைவரும் ஆய்வாளன்
எங்கள் இருப்பை
அந்த மண்ணில்
கண்டுகொள்வான்.
எங்கள் நிறமூர்த்தங்கள்
ஒன்று கலந்துள்ளதை
உறுதி செய்வான்.

# மௌனாஞ்சலி

நகரத் தெருவில்
ஜனசமுத்திரப் பேரிரைச்சல்.....
குரல்வளையை நெரித்தபடி
வாகன உறுமல்கள்......
ஒன்றையொன்று முட்டிமோதும்
ஒலிபெருக்கி ஓலம்......

இதற்கு மத்தியில்.
ஒரு பெரிய கட்டிடத்தின்
ஒதுக்குப்புற அறையொன்றில்
நான்கு சுவர்க்கு மத்தியில்
நாலைந்து ஜீவன்களின்
மௌனாஞ்சலி

இந்த யுகத்தின்
ஆத்மாவைத் தூசுதட்ட
போராடிப் புண்பட்டு
புலனடங்கிப்போன
ஓர் புலமையாளருக்காய்.....

# பார்வை

நீலவானம் பார்த்தேன்......
நித்திலங்கள் பார்த்தேன்........
ஆழி பார்த்தேன்......
அதில் புரளும் அலைகள் பார்த்தேன்.
மரந்தளிர்கள் பார்த்தேன்.......
அழகழகாம் பூக்கள் பார்த்தேன்.......
மலைகள் பார்த்தேன்.......
மடிதவழும் அருவிகள் பார்த்தேன்......

'நல்ல ரசிகன்' என்றார்கள்.

நளின இளம் பெண்கள் பார்த்தேன்....
நர்த்தனங்கள் நடையசைவு பார்த்தேன்

'வெறியன்' என்றார்கள்
அடைமொழிகளோடு.

# மேடை

நேற்றேறி மேடையிலே
அகம்பாவம் கொண்டாடி
அழிந்து போனவர்கள் போகட்டும்

ஒருசாரார்
இனியென்றும் இம்மேடை
எங்களுக்கே என்றேறி,
ஆடி உணர்விழந்து
இலையுதிர் காலத்தின்
எல்லையிலே நிற்கின்றார்.

கால வரம்பிட்டு......
கச்சிதமாய்த் திட்டமிட்டு.....
ஆடிக் களிப்பூட்டி......
கௌரவமாய் விடைகொடுக்க
இனி
யார் வருவார் மேடைக்கு?

# கர்வம்

கோபுரத்தின் உச்சியில்
தூக்கி நிறுத்தினர்.

எல்லோரையும் விட
உயர்ந்தவன் என்று
இறுமாந்து கிடந்தேன்.

ஒருகண மயக்கம்
விழுந்தது உதை
முதுகில்......

எல்லோரும்
நிமிர்ந்து நடக்கும் பூமியில்
நான்
கவிழ்ந்து கிடந்தேன்.

# சந்திப்பு

வணக்கம் சொல்வேன்
சுகம் விசாரிப்பேன்
உபசரிப்பேன்.

கால இடைவெளியின் பின்
தற்செயலாக
என் இனிய
நண்பர்களை சந்திக்கும்போது.......

அம்மா அப்பா
மனைவி பிள்ளைகள் பற்றி
எதுவுமே கேட்கமாட்டேன்
எதுவுமே சொல்லமாட்டேன்.

துப்பாக்கிதாரிகளும்
குண்டு தூக்கிகளும்
நடமாடும் காலமிது
யார் யாரை
எப்பொழுது எப்பொழுதோ.....

சிறு நேரச் சந்திப்பு
சந்தோசம் பயக்கட்டும்.

# அலுவலர்கள்

கஞ்சத்தனம் எதற்கு?
உரிமை
சலுகை
சம்பள உயர்ச்சி
இன்னும்
கேட்பதெல்லாம் கொடுங்கள்
இராசகாரியம்
செய்பவர் அல்லவோ!

நாங்கள் சொல்வதெல்லாம்
மேலதிகமாக
ஆளுக்கொரு
முகமும் கொடுங்கள்
மனிதம் நிரம்பியதாய்.

# உலக சாதனை

சந்தோஷ சாகரத்தில்
நீ
நீச்சலடித்து நீச்சலடித்து
மழலை முத்து [illegible]
கண்டெடுத்துள்ளதை
நானறிவேன்.

என் விதியின் புத்தகம்
வேறுவிதமாக அல்லவா
எழுதப்பட்டுள்ளது.

அன்று
எனக்காக நீ சிந்திய
கண்ணீர் முத்துக்களை
ஒருவேளை நீ
மறந்திருக்கக்கூடும்.
கண்டிப்பாய் நீ
மறக்கவும் தான் வேண்டும்.

அல்லது
அறியாப் பருவத்தின்
புரியாப் புலம்பலென
புறந்தள்ளியிருக்கக் கூடும்.

கடலைக்
குடைந்து குடைந்து
சுழியோடிச் சுழியோடி
அந்தக் கண்ணீர் முத்துக்களை
நான்
தேடிக்கொண்டிருக்கிறேன்.

நாளை
உலக சாதனைப்
புத்தகத்திலாவது
என் பெயரும்
எழுதப்படட்டுமே
கண்ணீர் முத்துக்களை
கண்டெடுத்ததாய்.

# கோடை

கழுவிக் கழுவி
சலித்துவிட்டது
மழைக்கு.

சிதறித் தெறித்து
மரந்தளிர்களில்
ஒட்டியுலர்ந்த
சதைத்துண்டுகளையும்...

இரத்தக் குழாய்கள்
வெடித்துப் பாய்ந்து
குருதி படிந்த
மண் மார்பையும்.....

காகமும் நாயும்
கிழித்துக் குதறி
நாறிப்போன
எச்சங்களையும்.....

கழுவிக் கழுவி
சலித்துவிட்டது
மழைக்கு.

# அடிமைச் சாசனம்

கண்ணுக்கோர் காட்சியில்லை
காதுக்கோர் இனிமையில்லை
நொந்து
புண்ணாகிப் போய்விட்டது நெஞ்சு.

இரவுகள் தோறும்
இரையாகும் அவலம்,
நான்கு சுவர்களுக்குள்
நடக்கும் நாடகம்.

அன்புச் சாசனம் என்றபெயரில்
அரங்கேறியதோ
அடிமைச் சாசனம்.

புளித்துப்போய்விட்டது முகம்
சலித்துப்போய்விட்டது குரல்

எனக்குள்ளிருந்து
ஏதோவொன்றெழுந்து
நரம்புகள் நறுக்கி
பாய்ந்தோடப் பார்க்கிறது
சத்தியமாய்.

அதற்குள்
என் கால்களுக்கு
விலங்கிடுங்கள் விரைவாய்.

# தபால்

தபாற்காரனுக்காய்
தவங்கிடந்ததொரு காலம்
அந்த
நினைவழியா நாட்கள்
நெஞ்சில் நிலைக்கிறது.

பக்குவமாய்
இதயத்தைச் சுமந்துவரும்
காகிதக் கட்டு.

எழுத்துக்கள்
உறவுப் பாலமிடும்
கொங்ரீட் கற்கள்.

எத்தனை ஆளுமைகளின்
முகமும் முகவரியும்
பெறுமதிமிக்க பொக்கிஷமாய்
என் களஞ்சியத்தை
அலங்கரிக்கின்றன.

தபாற்காரன்
இப்பொழுதெல்லாம்
பார்த்தும் பார்க்காமலும்
சிரித்தும் சிரிக்காமலும்
என்வீட்டைக் கடந்துபோகிறான்.

அவ்வப்போது
மின்சாரப் பட்டியலையோ
கூட்ட அழைப்புகளையோ
போட்டுவிட்டுப் போகிறான்.

தபால் தொடர்பை
துண்டாடியபடி
அபாயச் சங்காகவே
தொலைபேசி அழைப்புமணி
அடிக்கடி ஒலிக்கிறது
என் காதுகளில்........

# மந்திரவாதி

எழுத்தறிவித்த உங்களை
இறைவனென்றார்
ஏணியென்றார்
தோணியென்றார்
நிலவென்றார்
விழியென்றார்
வழிகாட்டும் விளக்கென்றார்.

உங்களை ஓர்
மந்திரவாதியென்றே
நான் சொல்வேன்.

வெறும்
வெண்கட்டிகொண்டு
எத்தனையெத்தனை
பொன்கட்டிகளை
ஊரெல்லாம்
உருவாக்கிவிட்டீர்கள்?

இந்த மந்திரம்
உங்களுக்கல்லவா தெரிந்திருந்தது.

# அழகிய கவிதை

இருண்ட காடுகள்
அமைதியாய்
சலசலக்கும்,
மலைக் குன்றுகள்
ஆஜானுபாகுவாய்
அமர்ந்திருக்கும்,
வெள்ளிப் பாம்பாய்
நெளியும் அருவிகள்,
நிலவும் மேகமும்
ஒளித்து விளையாடும்,
ஒளிப் பொட்டுக்கள்
கைகொட்டும்.

அழகிய கவிதை
எழுது எழுது
மனம் சொல்லும்.

எழுதலாம் தான்.

கொஞ்சம் மண்வாசனை
கொஞ்சம் நவீனத்துவம்
கொஞ்சம் நுண்ணுணர்வு
கொஞ்சம் கவிதைமொழி
யாரிடம் கடன் கேட்பது.....?

# விரல்கள்

ஞாலத்தின் நரம்புகளை
மீட்டுகின்ற விரல்கள்
ஏலத்தில் விலைபேச
இயலாத விரல்கள்.

காலத்தின் கனவுகளை
காவியத்தில் தீட்டியதும்
கற்பனையின் சிறகுகளை
ஓவியத்தில் பூட்டியதும்
இந்த விரல்களே!

விழிதேடிக்கொண்ட
இந்த விரல்களின் வழிதேடி
ஊர்வலம்போன
இதயங்கள் ஆயிரம்.

வித்தைகள் காட்டும் விதி
இந்த விரல்களுக்கிருக்கவில்லை
பணக் கத்தைகள் புரட்டும்வழி
இந்த விரல்களுக்குப் புரியவில்லை.

அதனால்தான்
மானுட சாம்ராஜ்யத்தின்
மகுடத்தைக் கூட
இந்த விரல்களால்
தொட முடிந்தது......
தொழ முடிந்தது......

# வாக்குறுதி

உச்சி மலையேறும்
பாரிய முயற்சி.
முதற் தடம் பதித்ததும்
மூச்சு முட்டியது.

‘சூரியனைத் தொடுவேன்
நிலவில் நீந்துவேன்
அடிவார நீரை
அள்ளிக் குடிப்பேன்.....’

காட்டுப் பூச்சிகள்
பட்சிகளெல்லாம்
கோஷமெழுப்பின.....

‘முதலில் ஏறு
அப்புறம் மற்றவை’

# பக்கபலம்

ஆத்மாவின் ராகமாய்
என் பாடல் ஒலித்தது
பலமுறை.

எந்தச் செவி அரங்கிலும்
அது
ஏறி அமர்ந்து கொள்ளவில்லை.

பக்க வாத்தியங்கள் முழங்க
அவனது முணுமுணுப்பு
எழுந்தது......
ஒரேயொரு தடவை.

அது
புவி அரங்கின்
உச்சியில் ஏறி
உட்கார்ந்து கொண்டது.

# உயிர்ப்பு

ஆயிரம் காலத்து
புத்தகக் களஞ்சியம்
தீ நாக்குகளால்
தீண்டப்பட்டபோது
நானும் எரிந்துபோனேன்.

மசூதிகளுக்குள்
மானுட முதுகுகளை
துப்பாக்கி முனைகள்
துளையிட்ட போது
நானும் உடைந்துபோனேன்.

அகதி முகாமின்
இற்றுப்போன கிடுகுகள்
முற்றாய்க் கருகியபோது
நானும் கருகிப்போனேன்.

புகையிரத சாலையில்
பள்ளிப் பிஞ்சுகள்
பொசுங்கிச் சிதறியபோது
நானும் சிதறிப் போனேன்.

எரிந்து கருகி
இறந்து இறந்து
உயிர்த்தெழுகின்றேன்......
இடைக்கிடை
துப்பாக்கி துளைக்காத உடலோடு
தீக்கிடங்குகளுக்குள்
குளிர்ந்து நிற்பதாய்
கனவு காண்கிறேன்.

# சேவைச் செம்மல்

கேளுங்கள் கொடுக்கப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்

கோவில் திருவிழா
திருத்த வேலைகள்
கல்விச் சாலை
கணனிக் கூடம்
புத்தக வெளியீடு
விளையாட்டுப் போட்டி
அனர்த்த உதவி
அவசர தேவை

கேளுங்கள் கொடுக்கப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்

தவறியேனும்
கேட்கவும் வேண்டாம்
தட்டவும் வேண்டாம்
எனது தொழிலை........
வருமான வழிகளை.

# வரம்

இல்லாததை
இருப்பதுபோல்
எழுதுதற்கு
எனக்கு
வேண்டாம் வரம்.

இருப்பதை
இல்லாததுபோல்
எழுதுதற்கு
எனக்கு
வேண்டாம் வரம்.

இருப்பதை
இருப்பதுபோல்
எழுதி உணர்த்தும்
கலைவரம் தா கனிந்து.

# பனிப்பூ

கெம்பஸ் பூங்காவில்
அந்தப் பூ

'ஆயிரம் பூக்களில்
நீயொரு
அதிசயப்பூ' என்றேன்

'இறைவன் சந்நிதானத்தில்
எல்லாப் பூக்களுக்கும்
வாய்ப்பில்லையே' என்றாய்

இப்படித்தான்
எங்கள் சந்திப்பு
அங்குரார்ப்பணமாகியது.

உனது
அறிவும் அழகும்
பனிப்பூ உதிரும்
இலண்டன் வாழ்வை
சாத்தியமாக்கியது.

இப்பொழுது
மூன்றாவது மழலைப்பூவும்
பூத்திருப்பதாக
காதோடு ஒரு செய்தி.

எனது முகவரி
இன்னும் மாறவில்லை
எனது தொலைபேசி
இன்னும் மாறவில்லை......
உனது முகவரி
தொலைபேசியெல்லாம்
மாறிவிட்டதாய்க் கேள்வி.

நாளாந்தம்
நான் எனது
ஆட்டோகிராஃபை
திறந்து மூடுகிறேன்.

அதில் நீ
பெரிதாக
ஒன்றும் எழுதவில்லை.
ஆக நான்கே சொற்கள்
இப்படி
"நினைவே நீ
நீயே நினைவு"

# கலை

மனிதாபிமானம் மதிப்பிழக்கும்போது
கொடுமையும் மிடிமையும்
கோலோச்சும் போது.....
கலையும் இலக்கியமும்
கண்மூடிக் கொள்ளவில்லை
கைகோர்த்துக் கொள்கிறது.

கலை
ஆத்மாவுக்கு ஆனந்தமளிக்கிறது.
அதனால்தான்
கலைஞனின் செல்வாக்கு
செல்லரித்துப் போகவில்லை.
எந்த விலங்குகளாலும்
அவனைக்
கட்டிப் போட முடியவில்லை.

உயர்ந்த கலைகளால்தான்
உடைந்த உலகம்
ஒன்றுபடும்.
சிதைந்த இதயங்கள்
சீர் பெறும்.

# புல்லாங்குழல்

தொடக்கூடத் தேவையில்லை
நினைத்தாலே போதும்
இனிய ராகம் எழுப்பும்
புல்லாங்குழல் அது.

இந்த மண்ணைப் புல்லரிக்க வைக்கும்
மகாசக்தி
அதற்குள்ளே மறைந்து கிடந்தது.

ஆம்
எதிர்காலத்திற்கு
முகவரியிடப்பட்ட
புல்லாங்குழல்.

போய்ச் சேர்ந்ததோ
நரம்பில்லாக் கரங்களில்.....
படுக்கை அறையிலும்
சமையல் அறையிலும்
அல்லாடிக் கொண்டிருக்கிறது.

வெறும் மூங்கில் தண்டாகிவிட்ட
புல்லாங்குழல்.

விதியின் விலாசம்
அதில்

# விதி....?

இந்தக் கொடுமை
இந்த அடக்குமுறை
இந்த வேதனை
எங்கள் தலைவிதியா?

இதனை
மாற்றி எழுதவே
என்கைகள்
படைக்கப்பட்டுள்ளன!

யார் வருவார்?
என் கைகளுக்கு
விடுதலை தர,
விலங்குடைத்து....!

# பூகம்பம்

பெருமலையின் அடிவாரத்தில்
சிறுகுன்றுகள்.

சூரியக் கதிர்களை....
காற்றை....
மழையை.......
குன்றுகள்,
பயந்து பயந்தே நுகரும்!

பெருமலை
உறுமும்...
வெப்பப் பார்வை கக்கும்....
ஆதிக்கமும் செய்யும்.....
சிலபோது,
அபகரிக்கவும் துணியும்....

பூமித் தாய்க்கு
கோபம் பொங்கி.....
பூகம்பமொன்று
வெடிக்கும் வரையில்!

# ரயில் சிநேகிதம்

வடக்கு ரயிலின்
வாடிக்கையாளன் நான்

நாளாந்தம்
இடையில்
ஏறி இறங்கும் நீ
ஓர் பயணியல்ல.

மாம்பழம் விளாம்பழம்
பயற்றங்காய் வெண்டிக்காய்
கச்சான் கடலையென்று
கூவிக் கூவி விற்பாய்

என்னையும்
உன் வாடிக்கையாளனாய்
நீ எண்ணியிருப்பாய்.

உண்மை அதுவல்ல
உன்மீது
ஏதோவொரு பிடிப்புக்காய்
நான்
விலை கொடுக்கிறேன்.

எந்தக் கலாநிதிக்கும்

உன் ரயில் பொருளாதாரம் பற்றி
தெரிந்திருக்க நியாயமில்லை.

உன் அப்பா இல்லாதிருக்கலாம்
உன் தாய் நோயுற்றிருக்கலாம்
ஒரு சிறு குடிசை
உன் வாழிடமாகலாம்
உன் கல்வி
காவு கொள்ளப்பட்டிருக்கலாம்.

இது பற்றியெல்லாம்
இந்த மூன்று வருடத்தில்
ஒரு வார்த்தைகூட
நீ சொன்னதில்லை.

என் ரயில் பயணத்தின்
இறுதிநாள் இன்று.

வழமை போல்
பயற்றம் பொதிக்காய்
கைமாறும் ரூபாய்.

இதென்ன இது?
புன்னகைத்தபடி
எலுமிச்சம் பையொன்றையும்
பரிசாய்த் தந்தாய்

என் பிரிவுச் செய்தியை
யாருனக்குச் சொன்னது?
உள்ளுணர்வு சொல்லியதா?

என்னை மன்னித்துவிடு
பெயர் தெரியாச்
சிநேகிதியே.

# இதயநோய்

புகையா? மதுவா?
பெண்கள் தொடர்பா?
மாமிசப் பிரியனா?
மிகுந்த உணவா?
கவலை அழுத்தமா?
கண்விழித் துழைப்பா?

இதய நோயுடன்
ஒருநாள் வருங்கால்
இப்படிக் கேள்வி.....
என்னிடம் வேண்டாம்.

எனது சஞ்சிகை
எனது புத்தகம்
மடித்துச் சுருட்டி
புரட்டும் போது.......
இவரும் இவரது
எழுத்தும் என்று
ஏளனம் செய்து
சிரிக்கும் போது......
நொந்ததுண்டு

இதயம்
வெந்ததுண்டு.

மனைவி, பிள்ளைகள்
நண்பர்கள் என்று
எவரும் இதற்கு
விதிவிலக்கில்லை.

இதய நோயுடன்
ஒருநாள் வருங்கால்........

# தவிப்பு

அலுவலகக் கோர்ப்புகளுடன்
அல்லாடிய களைதீர
ஒருநாள் விடுமுறை,
மீண்டும்
அதே சோர்வுகளுடன்
அல்லாடத் தயாராக.

மனைவியின் முன்மொழிவாய்
வீட்டுத் தேவைகளும்,
பிள்ளைகளின்
சின்னச் சின்ன ஆசைகளும்,
பொது வேலைகளென்று
நண்பர்கள் தரிசனமும்,
கடிதமும் படிவமுமாய்
வாசற்படி வருவோரும்
என் விடுமுறையை
பங்கு போட்டுக் கொள்கின்றனர்.

என்
எழுத்தும் படிப்பும்
தன்னார்வங்களும்
எனக்குள்ளேயே
ஏங்கித் தவிக்கும்.

# முழங்கு

சங்கே முழங்கு
'மனிதா வாழ்க'
என்றே முழங்கு

எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
எங்கள் பலமும்
எங்கள் நலமும்
எங்கள் அறிவும்
எங்கள் ஆற்றலும்
அதற்காகத் தான்
என்றே முழங்கு

சங்கே முழங்கு
'மனிதா வாழ்க'
என்றே முழங்கு.

# கோடுகள்

எங்கள்
தேசப் படத்தில்
வறுமைக் கோட்டை
யார் வரைந்தார்கள்?

நீரும் நிலமும்
மரகத மணியும்
வயலும் தோப்பும்
இயற்கைச் சூழலும்
இயல்பாய்க் கொண்டது
இனியநம் தேசம்.

எங்கள்
தேசப் படத்தில்
வளக்கோடுகளை
வரைவோம் வாரீர்
மண்ணின் மைந்தரே.

# உனது பாதை

நீ விரித்த
அன்புப் பாதையில்
உன்னோடு கைகோர்த்தபடி
நடைபோடத்தான்
காத்திருந்தேன்.

மேகம் பூத்தூவவும்
நிலவு ஒளி பாய்ச்சவும்
தென்றல் வாழ்த்துப் பாடவும்
என்னோடு
ஒப்பந்தம் செய்திருந்தன.

எனை நோக்கி விரிந்த
தங்கப் பாதைகளையெல்லாம்
தவிர்த்துக் கொண்டேன்
சிவப்பு விளக்குக் காட்டி

நீ விரித்த பாதையில்
பைத்தியமாய்
அலைந்து திரிகிறேன் இப்போது.

அந்த மாடி வீட்டு
ஜன்னலைக் காணும் போது மட்டும்
எனது சித்தம் தெளிகிறது.
அந்தக் கணங்களில்
அழுது
கண்ணீர் வடிக்கிறேன்
மீண்டும் பைத்தியமாகிறேன்.

உனது பாதையின்
ஒவ்வொரு மண்துளியும்
முள்ளாய்க் குத்தி
குருதி கசிந்து
வலிமிகுந்து இதயம்
துடியாய்த் துடிக்கிறது.

# பூஜ்யம்

'எங்கள் பிரகாசம்
மதிக்கப்பட வேண்டும்'
விண்மீன்கள் கோரிக்கை.

'நாம்
பூத்திருக்கும் பூமியெலாம்
எங்கள் பூமி'
பூக்களின் பிரகடனம்.

'சுதந்திரமாய் நாம்
சுற்றிவர வேண்டும்'
தென்றலின் ஆதங்கம்.

காலம் கனியவில்லை

விண்மீன்கள்
சுட்டு வீழ்த்தப்பட்டன.
மலர்முகங்களில்
அமிலநீர் வார்ப்பு.
தென்றலுக்கு தீவைப்பு.

குறுநடை பயின்ற
எங்கள்
சாம்ராஜ்யம்
சாம்பல் மேடாகியது.

பீனிக்ஸ் பறவைகளே
ஓடிவாருங்கள் உதவிக்கு.

# குழுமம்

எங்கள் வீட்டுக் கோழி
குப்பையைக் கிளறியது.

எங்கள் வீட்டுச் சேவல்
கொக்கரக்கோ என்றது.

பார்த்தீர்களா
அற்புதம் அற்புதம்?
எங்கள் வீட்டுக் கோழி
அழகாகக் கவி எழுதும்.
எங்கள் வீட்டுச் சேவல்
அழகாய்ப் பாட்டிசைக்கும்.

அயல் வீடுகளிலும்
சேவலும் கோழியும்
இருக்கத்தான் செய்கின்றன.

# புதுமை

புன்னகைக் கற்களால்
உறவுப் பாலமிட்டாய்.

வார்த்தைப் பன்னீரால்
அன்புத் தளமமைத்தாய்

மனித நேயத்தால்
கோபுரம் எழுப்பினாய்

நெஞ்சுக்குள்ளே
ஆசனம் போட்டு
அதற்கு
கொங்ரீட் கால்களையுமல்லவா
பூட்டிவிட்டாய்.

இந்தப் பொறியியல் நெறியை
எங்கு நீ கற்றாய்
புதுமைப் பெண்ணே?

# பிரார்த்தனை

கடல் கடந்த
நீண்ட நெடுந்தூர
ஆத்மீகப் பயணம்.

சுங்கப் பகுதியின்
அங்கீகாரம்.

பாவனைக்கென்று
என் மனைவியின்
காது கழுத்து கைகளை
பத்து விரல்களை
பொன்னகையால்
பொலிவேற்றி வந்தேன்.

கடவுளே
அடுத்த வருடம்
போவதற்கிடையில்
அவளுக்கு
பத்துத் தலைகளையும்
இருபது கைகளையும்
நூறு விரல்களையும்
கொடுத்துவிடு.

இது
பாவம் கலைந்த
புனிதாத்மாவின்
பிரார்த்தனை.

# தனிமை

இருண்டுபோய்
தனித்துப் போய்
உதவியற்றுப் போய்
நான் சோர்ந்துவிடவில்லை.

என் சிரசுக்குள்ளிருந்து
பிரகாசிக்கும் நிலா
ஒளிதருகிறது.
உதவுகிறது.
உரையாடி
என்தனிமை போக்குகிறது.

நான்
உற்சாகமாகவே இருக்கிறேன்.

# சுயம்

நாங்கள்
உங்கள் கால்களால்
நடனமாட முடியாது.
உங்கள் கைகளால்
சித்திரம் தீட்ட முடியாது.
உங்கள் குரலால்
பாடலிசைக்க முடியாது.

எங்கள் கால்களால்
நடனமாடுவோம்.
எங்கள் கைகளால்
சித்திரம் தீட்டுவோம்.
எங்கள் குரலால்
பாடலிசைப்போம்.

நாங்கள்
நாங்களாகவே இருப்பது
உங்களுக்கும் நல்லது
எங்களுக்கும் நல்லது.

# அன்பு

நீ வானம்
நான் பூமி

வானம் பொய்த்தால்
பூமி வற்றி வரண்டு
புல் பூண்டுகள்
கருகிச் சிதைந்துவிடும்.

வானம் மெய்த்தால்
பூமி குளிர்ந்து
பயிர்பச்சை செழித்து
பூத்துக் குலுங்கும்.

அன்பே!
நீ வானம்
நான் பூமி.

# இழப்புகள்

பிறந்த வீடு
ஓடித்திரிந்த மண்
கூடி விளையாடிய
நண்பர்கள்.......
உறவினர்கள்....

பேச்சு
சிரிப்பு
சந்தோஷ ஆரவாரங்கள்.......

வயல், தோப்பு
குளக்கரை, புல்வெளி
மைதானம்.......

நாய், பூனை
காகம், குருவிகள்.......

எல்லாமே தொலைத்துவிட்டு
என்னை மாத்திரம்
தக்க வைத்துள்ளேன்
ஒற்றைக் காலுடன்.

# வெளிப்பாடு

முற்றாய் மறைத்து
புனிதம் பேசும்
உடல்-
அவிழ்த்துப் போட்டு
காபரே ஆடும்
மனம்.

# இடைவெளி

நிலவை நெருங்கும்
அக்கினிக் குஞ்சுகள்.

நிலவு சுடுமா?
அக்கினி குளிருமா?

எதிரும் புதிருமாய்
தூர இருந்தால்
உறவு மலருமா?

மெல்ல மெல்ல
நெருங்கிப் பார்ப்போம்,
அரசியல் வாதிகள்
கண்ணில் படாமல்

# மாற்றம்

வெள்ளை நிற மல்லிகையாய்
பள்ளிச் சாலையில்
வந்து புகுந்தாய்.
துள்ளித் திரிந்தாய்
புள்ளி மானாய்.

நச்சுக் காற்றும்
அமில மழையும்
உன்னை
தொட்டுத் தடவிச் சென்றதோ?

உன்
வெள்ளைச் சட்டையில்
பழுப்புக் கறைகள்
பத்தே வருடத்துள்.

# வேலை

பட்டம் பலபெற்றும்
பதவி இல்லை.
திட்டம் பலஇட்டும்
தீர்வு இல்லை.

நீயோ
அதிகம் படிக்கவுமில்லை
அதிக வயதுமில்லை.

ஆயினும்
உனக்கொரு தொழில் வாய்த்ததே.

போமகனே போ
போருக்குப் போ.

# சந்திப்பு....?

பிரிவு
இருவேறு திசைகளை
எமக்கு
நிச்சயார்த்தம் செய்துவிட்டது.

குரலற்றுப் போய்
உன் கண்ணீர்த் துளிகள்
என்னோடு கதை பேசிய போது
'மீண்டும் சந்திப்போம்' என்றேன்
ஓர் ஆறுதலுக்காய்.

என்றோ ஒருநாள்
மீள நாம் சந்திப்போம்
என்றவொரு உறுதி
எனக்குள்ளிருந்தது.

காலம் இப்படி
அனற்சேற்றை
அள்ளி வீசுமென்று
யார் நினைத்தார்கள்?

அந்த அனர்த்தம்
உன்னைச்
சுட்டதோ....
தூக்கித் தூர எறிந்ததோ....
எவருக்கு வெளிச்சம்?

தகவல் தடையை
எந்தச் சபையும்
எடுத்துப் பேசவில்லை.

எனது வாக்கு
பொய்த்துப் போனதா?
உன்மீது ஒளிபாய்ச்சும்
நம்பிக்கைத் தாரகை
கருகி வீழ்ந்ததா?

குரலற்றுப் போய்
முகம் சுமந்து நிற்கும்
என்
கண்ணீர் துளிகளுக்கு
யார் சொல்லுவார்
ஓர் ஆறுதல் வார்த்தை?

# ஆயுதம்

சுதந்திர மனதோடு
வண்ணத்துப் பூச்சியாய்
சிறகடித்த பயணங்கள்
நினைவுகளாகி விட்டன.

அதிகாலைப் பனியிலும்
உச்சிவெய்யில் அகோரத்திலும்
இடைநிறுத்தி
பயணப் பொதிகளைத் துழாவும்
காக்கிச் சட்டைகள்.

ஒரு பழங்குடையும்
சாயம் கலைந்த தொப்பியும்
ஒரு தண்ணீர்ப் போத்தலையும் தவிர
வேறென்ன இருக்க முடியும்
எனது பொதியில்.....?

நான் வைத்திருக்கும் கூராயுதத்தை
ஒரு நாள் கண்டு பிடிப்பார்களோ
என்ற அச்சம் கூட,
அற்றுப் போய்விட்டது இப்பொழுது!

அது
எப்பொழுதும் என்
நெஞ்சுக்கு நேரே வீற்றிருக்கும்
என் சேட் பொக்கற்றில்.

# வரவேற்பு

உன் மலர்ந்த முகத்தை.....
அதில் தவழும் புன்னகையை.....

உன் இளமையை.......
இளமையின் வசீகரத்தை.....

உன் பெண்மையை.....
அதன் வீராவேசத்தை......

உன் எல்லாவற்றையுமே
வரவேற்கிறேன்.

உன் கைகள்
ஏந்தியிருக்கும்
ஆயுதத்தைத் தவிர!

# வெளிச்சம்

எத்தனை விளக்குகளை
ஏற்றி வைத்தேன்!
திரும்பி பார்த்தபோதுதான்
ஒவ்வொன்றாய் அணைந்து போன
உண்மை தெரிந்தது.

இந்தக் காற்றை
யார் முடுக்கிவிட்டார்கள்
இப்படியொரு கொடுமை செய்ய.....?

வழிநெடுக
இருளாய் கிடக்கிறது.
கல்லும் முள்ளும் குத்துகின்றன.
விஷஜந்துக்களும்
இருத்தல் கூடும்.

இன்னொருவர் வந்து
விளக்கேற்றுவாரென்று
பார்த்திருக்கலாமா?

என் கண்கள் பூத்துவிட்டன

என் கால்கள்...... கைகளில்
இன்றும் சற்று வலிமையுண்டு.

தட்டுத் தடுமாறி
இன்னொரு விளக்கையேனும்
ஏற்ற முனைகிறேன்.....
கொஞ்சமென்றாலும்
வெளிச்சம் பரவட்டும்!

# துர்ப்பாக்கியம்

எல்லா விழுமியங்களும்
எல்லாப் பெருமைகளும்
உதிர்ந்து விழுந்துவிட்டன
துப்பாக்கியின் காலடியில்.....

விடுதலை கீதங்களை மட்டுமல்ல,
தேசிய கீதத்தைக் கூட,
இப்பொழுது
துப்பாக்கிகளே பாடுகின்றன.

# இல்லை

வீட்டு வசதி
பெரிதாய் இல்லை

சாதனங்களென்று
எதுவுமில்லை

சம்பளத்தில் எந்த
மீதியுமில்லை

வருமான வழிகள்
வேறு இல்லை

வெளிநாட்டு வேலையில்
யாருமில்லை.

அரை நூற்றாண்டாய்த்
தேடிய சொத்து
நூல்கள் மட்டுமே!
அதன்
பெறுமதி சொல்லவும்
எவருமில்லை.

# சாதனை

மேகங்கள் மோதின.

மின்னலும் இடியும்
மழையும் வெள்ளமும்
விட்டபாடில்லை.

அவன்
கல்வீடு சரிந்து
மண் வீடாயிற்று.
மண் வீடு இடிந்து
குடிசையாயிற்று.
அதுவும் எரிந்து
அகதி முகாமே
முகவரியாயிற்று.
இத்தோடு
பத்தாம் இடத்துக்கு
இடம் பெயர்ந்துள்ளான்.

நாளை
பரிசும் பாராட்டும்
பட்டமளிப்பும்
அவனுக்கும் நடக்கலாம்.

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**

*விஜித் கனுகல*
கலாசார அலுவல்கள் பணிப்பாளர்

*கே.டீ. காரியகரவண*
கணக்காளர்

*ஸ்ரீமதீ செனவிரத்ன*
நிர்வாக அதிகாரி

*டட்லி ராஜபக்க்ஷ*
பிரதி உதவியாளர்

**திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டி செயற்திட்ட இணைப்பாளர்**

*எம்.எல்.சுரங்க நயனஜீத்*
அபிவிருத்தி அதிகாரி

**அச்சு ஒருங்கிணைப்பாளர்**

*நிஷ்ஷங்க விமலவீர*
முகாமைத்துவ உதவியாளர்

**அச்சகம்**

விஷ்வ பிரின்டர்ஸ்
இல. 534, மருதானை வீதி,
கொழும்பு-10.

Arachigewatta

Myjutha Bq

ISBN978-955-0353-32-3
9789550353323

கலாசார அலுவல்கள் திணைக்களம்
8வது மாடி, செத்திரிபாய,
பத்தரமுல்ல